பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 04 2024 **SATURDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

2. மணிப்பூர் மாநிலத்தில், மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவை சுமுகமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

3. ரயில்வே ஊழியர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் வசதியை வழங்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், தேர்தல் ஆணையம் மற்றும் தெற்கு ரயில்வே பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

4. நடுக்கடலில் படகு பழுதானதால் தத்தளித்த பங்களாதேஷ் மீனவர்கள் 25 பேரை இந்திய கடலோர காவல்படையினர் பத்திரமாக மீட்டனர்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

தமிழகத்தில் 39 தொகுதிகள் ராஜஸ்தானில் 12 தொகுதிகள், உத்தரபிரதேசத்தில் 8 தொகுதிகள், மத்தியப்பிரதேசத்தில் 6 தொகுதிகள், அஸ்ஸாம், உத்ராகண்ட் மற்றும் மகாராஷ்ட்ராவில் தலா 5 தொகுதிகள், பீகாரில் 4 தொகுதிகள், மேற்குவங்கத்தில் 3 தொகுதிகள் உட்பட 102 தொகுதிகளில் இம்மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் முகாமிட்டு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதேபோல், காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தியும், அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவும் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் திரு. பிரகாஷ் கரத் இன்று மதுரையில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

மேற்குவங்க மாநிலத்தில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, உத்தரபிரதேசத்தில் அம்மாநில முதலமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான யோகி ஆதித்யநாத் ஆகியோரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 88 தொகுதிகளில், வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை முடிந்துள்ள நிலையில், ஜம்மு காஷ்மீரில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளிலும் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருவனந்தபுரத்தில் இன்று மாலை நடைபெறவுள்ள வாகனப் பேரணியில் பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா பங்கேற்கிறார்.

தமிழகத்தில் திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று சிதம்பரம், மயிலாடுதுறை தொகுதிகளிலும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தஞ்சாவூர், நாகப்பட்டிணம் தொகுதிகளிலும், பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கோவையிலும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களில் உரையாற்றவுள்ளனர்.

ஒருபுறம் அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சாரங்களை விரைவுபடுத்தியுள்ள நிலையில், வாக்குப்பதிவிற்கான விரிவான ஏற்பாடுகளில் தேர்தல் ஆணையம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

பதற்றமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளவேண்டிய கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அந்தந்த மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் ஆணையத்தின் உயரதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, தமிழகத்தில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 168 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில் அந்த தொகை மற்றும் பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மணிப்பூர் மாநிலத்தில், மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவை சுமுகமாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது

அதிக அளவில் மக்கள் வாக்களிப்பதற்கான விழிப்புணர்வு பிரச்சாரங்களிலும் ஆணையம் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில், அம்மாநிலத்தில் மக்களவைத் தேர்தலை கண்காணிக்க தேர்தல் ஆணையத்தின் சார்பில் 7 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் ஏற்கனவே மாநிலத்திற்கு வந்துள்ளதாகவும், மணிப்பூர் தலைமை தேர்தல் அதிகாரி திரு. பிரதீப்குமார் ஜா கூறியுள்ளார்.

மாநிலம் முழுவதும் 118 மாதிரி வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்படும் என்றும், தேர்தலின் போது முறையற்ற செயல்களை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ரயில்வே ஊழியர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் வசதியை வழங்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், தேர்தல் ஆணையம் மற்றும் தெற்கு ரயில்வே பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேரளாவில் ரயில்வே துறையினருக்கு தபால் வாக்கு செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைப் போன்று, தமிழகத்திலும் அனுமதிக்க வேண்டும் என்று மதுரையைச் சேர்ந்த ரயில்வே அதிகாரி ஒருவர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுமீதான விசாரணை நடைபெற்றபோது ஆஜரான தேர்தல் ஆணைய வழக்கறிஞர், தபால் வாக்குப்பதிவுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக ரயில்வே நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உரிய பதில் அளிக்கப்படவில்லை என்று கூறினார்.

தபால் வாக்கு செலுத்துவதற்கு விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசம் முடிந்துவிட்டதால், இனிமேல் அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், இந்த விவகாரத்தில் ரயில்வே தவறு இழைத்துள்ளதால், இம்மாதம் 10ஆம் தேதி அடுத்த விசாரணை நடைபெறுவதற்குள் ரயில்வே பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

>>>>><<<<<

15 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை காணவில்லை என்று சமூகவலைதளங்களில் பரப்பப்படும் செய்திகள் தவறானது என்று இந்திய தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் எதுவும் காணாமல் போகவில்லை என்றும், இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பான உண்மையான தகவல்களை பொதுமக்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் மக்களவைத் தேர்தலின் போது பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை தடுக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஜம்முவில் உள்ள தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் உயரதிகாரிகளைக் கொண்ட கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையம் நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் உதவியோடு 24 மணிநேரமும் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூகவலைதளங்கள், ஊடகங்களை இந்த மையத்தின் அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தலில் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என முதல் முறையாக வாக்களிக்கவுள்ள விருதுநகர் மாவட்டத்தைச்சேர்ந்த மாணவர்கள் ஜக்கையன், பிரின்ஸ் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 42 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மனநலம் குறித்த மத்திய சுகாதார அமைச்சகத்தின் கட்டணமில்லா **Telemanas** உதவி மையத்தின் எண் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அனைத்து உயர்கல்வி நிறுவனங்களை பல்கலைக் கழக மானியக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இந்த உதவி எண் குறித்து பரவலாக விளம்பரப்படுத்துமாறும் உயர்கல்வி நிறுவனங்களை, மானியக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

கல்லூரி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் நுழையும் இளம் மாணவர்கள் சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போது, மனஅழுத்தம் மற்றும் பதற்றத்திற்கு ஆளாகவுள்ளது என்றும் அத்தகைய நேரத்தில் அவர்களுக்கு இந்த உதவி மையம் ஆறுதலாக இருக்கும் என்றும் மானியக்குழு தெரிவித்துள்ளது.

தொலைபேசி வாயிலாக மனஅழுத்தத்தைப் போக்கும் ஆலோசனை வழங்கும் முயற்சி மனநல பிரச்சினைகளுடன் போராடுபவர்களுக்கு எந்த நேரமும் ஆதரவையும், உதவியையும் வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது என்றும் **UGC** தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

நடுக்கடலில் படகு பழுதானதால் தத்தளித்த பங்களாதேஷ் மீனவர்கள் 25 பேரை இந்திய கடலோர காவல்படையினர் பத்திரமாக மீட்டனர்.

இந்தியா – பங்களாதேஷ் சர்வதேச கடல் எல்லையில் கடலோர காவல்படையின் கப்பல் வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, படகு பழுதாகி மீனவர்கள் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து, அவர்களை பாதுகாப்பாக மீட்ட கடலோர காவல்படையினர், எல்லையில் பங்களாதேஷ கடலோர காவல்படையினரிடம் ஒப்படைத்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய சென்னை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், ஐந்து விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்தது.

166 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஹைதராபாத் அணி, 18 புள்ளி ஒரு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி, வெற்றிபெற்றது.

ஜெய்ப்பூரில் இன்று மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

>>>>>END <<<<<